சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.395/2015

எ.ம.சா.1

நாள். 17.10.2024.

| பெயர்: | சண்முகம் | மதம்: | இந்து |
|---|---|---|---|
| தகப்பனார்/ கணவர் பெயர்: | --- | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| வட்டம்: | --- | வயது: | --- |

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் காவல்துறை உதவி ஆய்வாளராக பூலாம்பட்டி காவல் நிலையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது சங்ககிரியில் வசிக்கிறேன். நான் கடந்த 14.06.2015 ல் பூலாம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலைய குற்ற எண்.153/2015 வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக இருந்து 02.10.2015 ல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் எனது புலன் விசாரணையில் புகார்தாரர் குமரேசன் குடிபோதையில் வாகனம் ஓட்டி சென்று தன்னிச்சையாக கீழே விழுந்துவிட்டார் என்று தெரியவந்த காரணத்தினால் மேற்படி புகாரில் உண்மையில்லை என்று இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த இறுதியறிக்கையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அதன் நகல் எ.ம.சா.ஆ.1.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

குற்ற எண்.153/2015 வழக்கின் புகார் அப்போது தலைமை காவலராக பணிபுரிந்த சண்முககுமார் என்பவர் கோவை கே.ஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த

ஊத்துக்குளியை சேர்ந்த குமரேசன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் வாக்குமூலம் 23.06.2015 அன்று பெறப்பட்டுள்ளது என்றாலும் அப்போது மேற்படி குமரேசனுக்கு மயக்கம் தெளிந்த பின்பு வாக்குமூலம் கொடுத்தார் என்றாலும் சரிதான். மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் 7 நாட்கள் காலதாமதம் ஆக வழக்கு பதிவு செய்யப்படுவதற்கான காரணம் என்னவென்றால் காலதாமதத்திற்கான காரணம் எதுவுமில்லை. இந்த விபத்து சம்பந்தமாக எடப்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றாலும் அதன் அடிப்படையில் நேரில் சென்று வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் எடப்பாடி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்ற விவரத்தை மனுதாரர் என் விசாரணையின் போது தெரிவித்தார். நான் எடப்பாடி அரசு மருத்துவமனையில் தயார் செய்யப்பட்ட விபத்து முதல் தகவல் அறிக்கையை என் புலன் விசாரணையின் போது கைப்பற்றவில்லை எனறால் அந்த விவரம் வழக்கு நாட்குறிப்பில் பார்த்தால் தான் தெரியும். மனுதாரர் விபத்தின் போது குடிபோதையில் இல்லை என்றால் சரியல்ல. பின்பக்கமாக வந்த வாகனம் மோதி தான் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்து 10 நாட்கள் மனுதாரர் மயக்க நிலையில் தலைகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் இருந்திருக்கலாம். நான் மேற்படி குற்ற வழக்கின் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேனா என்றால் மனுதாரரே தன்னிச்சையாக கீழே விழுந்துவிட்டதால் நான் கைது நடவடிக்கை எடுக்கவில்லை. நான் 30.06.2015 அன்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் அல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் அருகில் இருந்த கரும்பாலையில் வேலை செய்தவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்துள்ளார்கள். சம்பவ சாட்சிகளின் முகவரிகள் எதுவும் சம்பவ இடத்தின் அருகில் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் சம்பவ இடம் அருகில் இருந்தார்கள். புகாரில் உண்மையில்லை என்று முடிக்கப்பட்டது சம்பந்தமான அறிவிப்பு புகார்தாரருக்கு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் குற்ற இறுதியறிக்கை இன்றுவரை நீதிதுறை நடுவருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றால்

வழக்கு நாட்குறிப்பை பார்த்தால் தான் தெரியும். நான் இந்த வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சண்முகம்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.